INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**25** பெப்ரவரி **2019**

**ஊடக அறிக்கை: இலங்கை பெயர்போன சித்திரவதைக் குற்றவாளிகளை விசாரணை செய்ய வேண்டிய நேரம் இது**

**ஜோகானஸ்பேர்க்:** தொடர்ந்து இடம்பெற்று வரும் சித்திரவதைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து இலங்கை உண்மையில் அக்கறையாக இருந்தால் சித்திரவதைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அறிக்கைகளில் பெயர் குறிப்பிடப்பட்ட பெயர்போன பாதுகாப்பு அதிகாரிகளை பதவியில் இருந்து இடைநிறுத்தி அவர்களை விசாரணை செய்வது அவசியமாகும். கடந்த காலத்திலும் தற்போதும் தொடர்ந்து நடைபெற்றுவரும் சித்திரவதைகள் பற்றி பல்வேறான அறிக்கைகள் வெளிவந்த நிலையிலும் குறிப்பிட்ட சில அறிக்கைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட சித்திரவதையாளர்கள் தண்டனையிலிருந்து பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அடுத்தடுத்து பதவிக்குவந்த இலங்கை அரசாங்கங்கள் தாம் சித்திரவதைகள் குறித்து பூச்சிய சகிப்புத்தன்மையைக் கொண்டிருப்பதாக மேற்கொண்ட தெளிவற்ற அறிவித்தல்களை அர்த்தமற்றதாக்கியுள்ளன.

தமிழ்க் கைதிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை இராணுவத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களையும், ( அண்மையில் பயிற்சிக்காக வெளிநாட்டில் உள்ளவர் உட்பட) அத்துடன் இலங்கைக் கடற்படையினைச் சேர்ந்த சித்திரவதைக் குற்றவவாளிகளையும் குறிப்பிடாமல் ஒரு பாதுகாப்பு பிரிவினை மட்டும் சேர்ந்த மிருகத்தனமான சித்திரவதைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் 47 குற்றவாளிகளின் பெயர்களை ITJP ஆனது அடையாளங்கண்டிருந்தது. சித்திரவதைக் குற்றவாளிகளில் ஒருவர் வெளிநாட்டு தூதரகத்தில் தற்போது பணியமர்த்தப்பட்டுள்ள அதேவேளையில் வேறு இருவர் அண்மையில் அவுஸ்ரேலியாவில் வசித்து வருகின்றார்கள்.

"*வெளிநாட்டில் இருக்கும் எங்களால் இவ்வாறு பெரியளவில் சாட்சியங்களை சேகரிக்கமுடியுமானால் சுயாதீனமான அமைப்புக்கு அறிக்கை சமர்ப்பிக்கும், விசாரணைக்கான உரிய அதிகாரங்களைக் கொண்ட நாட்டுக்குள்ளே இருக்கும் ஒரு நம்பத்தகுந்த அணியினால் எவ்வளவத்தை அடையமுடியும் என்பதை நினைத்துப் பாருங்கள். ஆரம்பத்தில் இருந்தே குவாட்டமாலாவில் உள்ளதைப் போல சுயாதீனமான சர்வதேச விசாரணைப் பிரிவினை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்கு நாங்கள் முன்வந்த போதும் இது பற்றி எங்களுக்கு அவர்களிடத்தில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆளவேரூன்றியுள்ள இந்த அடக்குமுறை கட்டமைப்புக்களை அகற்றுவது முக்கியமானதாகும் இல்லாவிட்டால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்*" என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

**தொடரும் சித்திரவதை**

இலங்கையில் இராணுவத்தாலும் பொலிசாரினாலும் தொடரும் சித்திரவதைகள் பற்றிய அண்மைய அறிக்கையினை 2015 – 2017 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட 16 பேரை அடிப்படையாக கொண்டு யுகேயிலுள்ள பிரதான புனர்வாழ்வு அறக்கட்டளை அமைப்பான Freedom From Torture வெளியிட்டது. ITJP ஆனது 2015 -17 ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான 76 சம்பவங்களை முன்னர் ஆவணப்படுத்தியிருந்தது. 2017 இல் ஆசோசியேற்றட் பிரஸ் என்ற செய்தி நிறுவனமானது பாதிக்கப்பட்ட 20 பேரினதும் மற்றும் 32 மருத்துவ அறிக்கைகளையும் அடிப்படையாக கொண்டு தொடர்ந்து இடம்பெற்றுவரும் சித்திரவதை மற்றும் ஆண்கள் மீதான பாலியல் வன்புணர்வு தொடர்பில் தனது ஒரு பெரிய ஆய்வினை வெளியிட்டிருந்தது.

"இலங்கை பற்றிய ஐ.நாவின் அறிக்கையானது பாதுகாப்பு படையினரின் திட்டமிட்ட சித்திரவதைகள் பற்றி விபரித்துள்ளதுடன் பாலியல் வன்முறை என்பது திட்டமிட்ட அமைப்புசார் கொள்கையின் ஒரு பகுதியாகும் எனவும் தெரிவித்தது"[1]. சிறைச்சாலைகளுக்கு ஒரு சில தடவைகள் சென்று வருவதன் மூலம் சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள் மற்றும் சித்திரவதைகள் நின்றுவிடப் போவதில்லை – குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் மற்றும் கட்டளையதிகாரிகள் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்" என சூக்கா தெரிவித்தார்.

**உடனடி நடவடிக்கைகள்:**

சித்திரவதையினைத் தடுப்பதில் இலங்கை உண்மையில் அக்கறையாக இருந்தால் வேறு பலரில் பின்வரும் பெயர்போன தனிப்பட்டவர்களை உடனடியாக பதவியில் இருந்து இடைநிறுத்தி விசாரணை செய்ய வேண்டும் என ITJP நம்புகின்றது:

1. **நந்தன முனசிங்க**: பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள்[1] தொடர்பில் இவரும் ( மற்றும் TID இன் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளும்) உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும் என 2007 இல் சித்திரவதை மீதான ஐ நாவின் விசேட பிரதிநிதி மான்பிரட் நோவக் அழைப்பு விடுத்திருந்தார். பதிலாக அவருக்கு மீண்டும் மீண்டும் பதவியுயர்வு வழங்கப்பட்டு அவர் தற்போது மூத்த பொலிஸ் மா அதிபராக உள்ளார். 2016 இல் ஆச்சரியம்தரும் வகையில் அவர் இலங்கையின் சாட்சியாளர் பாதுகாப்பு தொடர்பான அமைப்பிற்கு நியமிக்கப்பட்டார் அத்துடன் 2017 இல் வெள்ளை வான் கடத்தல் முயற்சி பற்றிய விசாரணைக்குப் பொறுப்பாக விடப்பட்டார்.
2. **சிசர மெண்டிஸ்:** இவர் 2015 OHCHR இன் அறிக்கையில்[1] குறிப்பிட்ட எண்ணிக்கையான பத்திரிகையாளர்கள் மற்றும் பலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட இலங்கையின் பெயர் போன சித்திரவதை இடமான "நான்காம் மாடிக்குப்" பொறுப்பாக இருந்ததாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். திரு மெண்டிஸ் அவர்கள் சிறிசேனா அரசாங்கத்தினால் ஓய்வு பெற்ற பின்னரும் பாதுகாப்பு அமைச்சில் தேசிய புலனாய்வு மையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் சித்திரவதைக்கு எதிரான ஐ.நாவின் குழுவுக்கு அரசாங்கத்தின் தூதுக்குழுவில் ஒருவராக ஜெனீவாவிற்கு அனுப்பப்பட்டார். "பல பயங்கரமான சம்பவங்கள் இடம்பெற்ற சிவில் யுத்தம் முடிவுறும் தறுவாயில் நாட்டில் துன்புறுத்தல்களுக்கு மிகவும் பெயர்போன இடத்திற்கு கட்டளையிடும் பொறுப்பில் இந்த நபர் இருந்தார்" என நியோர்க் டைம்சிற்கு ஐ.நாவின் குழுவினைச் சேர்ந்த பெலைஸ் கார் தெரிவித்தார். திரு மெண்டிசின் பணி பற்றி ஐநா குழுவில் இருந்து எழுப்பப்பட்ட முறையான கேள்விகளுக்கு இலங்கை இன்னமும் பதிலளிக்கவில்லை.
3. **ஜெகத் ஜெயசூரியா**: 07 ஆகஸ்ட் 2007 தொடக்கம் 14 யூலை 2009 வரை ஜோசப் முகாமின் கட்டளையதிகாரியாக நாட்டின் சித்திரவதைகளுக்குப் பெயர்போன இடங்களில் ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்தார். சித்திரவதைகள் மற்றும் பாரிய மீறல்கள் குறித்து இலத்தீன் அமெரிக்காவில் 2017 இல் அவருக்கு எதிராக சில சர்வதேச சட்டவரம்புக்குட்ட வழக்குகளை ITJP கொண்டுவந்தது.
4. **சவேந்திர சில்வா:** போர் முடிவடைந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்ட தமிழர்களை சித்திரவதை செய்வதற்கு தன்னுடைய ஆட்களுக்கு அனுமதி வழங்கியதாக பாதிக்கப்பட்டவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது. போர் குற்றங்கள் பற்றிய தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் 2019 இல் இராணுவப் பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

[1] பத்தி 591, OISL, 2015.

[2] “பொறுப்பானவர்களை நீதியின் முன்கொண்டுவருவதற்கு சித்திரவதைகள் மற்றும் தவறான நடத்தல்கள் பற்றிய எல்லா குற்றச்சாட்டுக்கள் பற்றியும் உடனடியான மற்றும் சுயாதீனமான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என விசேட பிரதிநிதி சிபார்சு செய்தார். ( அதாவது குற்றம் செய்தவர்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமன், பொலிஸ்கான்ஸ்டபிள் பெரேரா மற்றும் TID இன் பணிப்பாளர் , பொலிசின் மூத்தமேலதிகாரி நந்தன முனசிங்க உட்பட்ட அத்துடன் நிக்கலஸ் ரீபனுடைய சித்திரவதைக்கு பொறுப்பான CID இன் அதிகாரிகள்)”
http://www2.ohchr.org/english/bodies/hrcouncil/docs/7session/A.HRC.7.3.Add.6_ch.pdf

[3] A/HRC/30/CRP.2, பத்தி 553.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT